<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.2 |
|---|---|---|---|
| பெயர் | சுப்ரமணி | நாள் | 26.03.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

7) எனக்கு முன்பு இவ்வழக்கில் சாட்சியம் அளித்த வா.சா.1 தன் சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி வா.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தில் விட்டுப்போன சங்கதிகளை தெரிவிக்கவே நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால்தான் மேற்படி வா.சா.1ன் முதல் விசாரணை பிரமாணபத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அதே சங்கதிகளை தற்போது நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

8) காவேரி என்பவர் யார் என்றால், என் பெரியப்பா. அவர் தற்போது இறந்துவிட்டார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், பழனி, காவேரி, குழந்தைப்பையன், ஆறுமுகம் ஆகிய நான்கு வாரிசுகள் உள்ளனர். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு மேற்படி உறவுமுறையும், வாரிசுகளும் தவறானவை என்றாலும், சரியல்ல. இவ்வழக்கை யார் யார் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால், பெரியண்ணன், சுப்ரமணி, ஆறுமுகம் (எ) சேகர் ஆகியோர் சேர்ந்து தாக்கல் செய்தோம். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு பெரியண்ணன் இறந்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி பெரியண்ணனின் இறப்பிற்கு பின் பெரியண்ணனின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால், இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.